மாகாணத் திறைசேரி – வடமாகாணம்

**Provincial Treasury – Northern Province**

පළාත් භාණ්ඩාගාරය - උතුරු පළාත

My No:-NP/09/FRM/ 2012 Date:- 10.04.2012

மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல:- PT/04/2012

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**<u>"தயட்ட கிருள"(Deyata Kirula) தேசிய அபிவிருத்திக் கண்காட்சியில் பங்குபற்றிய அலுவலர்களிற்கான படிகளின் கொடுப்பனவு</u>**

மேற்படி விடயம் தொடர்பாக 7/2012ம் இலக்கமும், 26.03.2012ம் திகதியும் கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் பிரகாரம், 2012 தேசிய சுதந்திர தினத்திற்கு ஒருங்கிசைவாக நடாத்தப்பட்ட தேசிய அபிவிருத்தி குறித்த "தயட்ட கிருள"கண்காட்சிக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்ட, மேலதிக நேரக் கொடுப்பனவிற்கு உரித்துடையவரல்லாத அலுவலர்களிற்கு இணைந்த படிக்குச் சமனான மேலதிக விசேட கொடுப்பனவொன்றினை பின்வரும் அடிப்படையில் வழங்குவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

1. அரச செலவில் இருப்பிடம், உணவு மற்றும் சிற்றுண்டிகள் <u>வழங்கப்பட்டதன் காரணமாக இணைந்த படியினைப் பெறாத</u> அலுவலர்களிற்கு இவ் விசேடபடியானது வழங்கப்படமுடியும்.
2. அரச செலவில் இருப்பிடம், உணவு மற்றும் சிற்றுண்டிகள் <u>வழங்கப்படாததன் காரணமாக இணைந்த படியினைப் பெற்றுக்கொண்ட</u> அலுவலர்களிற்கு இவ் விசேடபடியானது வழங்கப்படமுடியும்.
3. மேலதிகநேரக் கொடுப்பனவிற்கு உரித்துடைய அலுவலர்களிற்கு இவ்விசேட படி வழங்கப்பட முடியாது. இருப்பினும் தாபனவிதிக்கோவைக்கமைவாக மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்படலாம்.
4. 2012.01.28ம் திகதியிலிருந்து 2012.02.13ம் திகதி வரையான காலப்பகுதிக்குள் அலுவலர்கள் தமது அலுவலக நேரத்தைவிட மேலதிகமாகக் கண்காட்சிக் கடமைகளை நிறைவேற்றிய நாட்களின் எண்ணிக்கைக்கு இந்த விசேட படியானது வழங்கப்படமுடியும்.

அ.மனோரஞ்சன்
பிரதிப் பிரதம செயலாளர் - நிதி,
வட மாகாணம்.
பிரதம செயலாளருக்காக

A. Manoranjan
Deputy Chief Secretary - Finance
Northern Province

பிரதிகள்:-
1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர், மாகாணப் பொது நிர்வாகம் - வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம் - வ.மா

(1–4) தகவலுக்காக